**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 303/2023**
**வழக்கு சாட்சி PW-8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தங்கபுஷ்பம் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பால்நாடார் | தொழில் | : | பீடி சுற்றும் வேலை |
| கிராமம் | : | கருவந்தா | வயது | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 10th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கருவந்தாவில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 ஜெயக்குமார் என்னுடைய மச்சான் மகன். அ.சா.2 திலீப் என்னுடைய கொழுந்தன் மகன். என்னுடைய வீட்டின் பின்னால் எனக்கு சொந்தமான இடம் உள்ளது. அந்த இடம் வழியாக எதிரிகள் நடந்து புழங்கிக்கொண்டிருந்தார்கள். அந்த நான் அந்த இடம் வழியாக அவர்கள் நடக்கக்கூடாது என்று சொன்னேன். அதனால், 06.07.2021 அன்று சாயங்காலம் 05.00 மணியளவில் என்னுடைய வீட்டிற்கு தெற்குபுறம் வைத்து எதிரிகள் என்னை அசிங்கமாக பேசினார்கள். நான் எதிரிகள் அசிங்கமாக பேசியதை அ.சா.1 ஜெயக்குமாரிடம் சொன்னேன்.

என்னுடைய வீட்டின் அருகே ஜெயக்குமாருக்கும் இடம் உள்ளது. ஜெயக்குமார் "ஏன் என் சித்தியை அசிங்கமாக பேசுகிறீர்கள்" என்று எதிரிகளிடம் கேட்டார். ஜெயக்குமாரிடமும் எதிரிகள் அசிங்கமாக

பேசினார்கள். பின்னர், எதிரி அருள்முருகன் அரிவாளை எடுத்து வந்து "உன்னை வெட்டாமல் விடமாட்டேன்" என்று கூறி ஜெயக்குமாரின் கழுத்தில் வெட்ட வந்தார். அதனை ஜெயக்குமார் கையால் தடுத்தார். எனவே, அந்த வெட்டு அவருடைய கையில் பட்டது. இதனை பார்த்த திலீப் தடுக்க சென்றார். அவரையும் எதிரி அருள்முருகன் அரிவாளால் வெட்டினார். அவருடைய கையில் காயம் ஏற்பட்டது. பின்னர், காயம்பட்ட ஜெயக்குமாரையும், திலீப்பையும் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.10 17:51:16 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 303/2023**
**வழக்கு சாட்சி PW-9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுதாகரன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கருணாகரன் | தொழில் | : | டெய்லர் |
| கிராமம் | : | கருவந்தா | வயது | : | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 10th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கருவந்தாவில் குடியிருந்து வருகிறேன். நான் டெய்லராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அ.சா.ஆ.2 அத்தாட்சியில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். 2021ம் ஆண்டு ஒருநாள் நானும், பொன்ராஜசிவாவும் சோலைச்சேரி பஸ்ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தோம். அங்கு போலீசாரும், எதிரி அருள்முருகனும் அங்கு நின்றிருந்தார்கள். எதிரி அருள்முருகன், போலீசாரிடம் "ஜெயக்குமாரை நான் வெட்டினேன்" என்று வாக்குமூலம் கொடுத்தார்.

எதிரி மஞ்சள் பையில் வைத்திருந்த அரிவாளை போலீசார் கைப்பற்றினார்கள். நான் அதற்கு சாட்சியாக கையெழுத்து செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள என்னுடைய கையெழுத்து **அ.சா.ஆ.4** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.10 17:51:24 +0530